1972 ஆகஸ்ட் 11]

திரு. எம். முத்தையா : ஒலி, ஒளிக் காட்சியை ஆஸ்திகர்கள் எதிர்க்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நாஸ்திகர்கள் அதை ஆதரிக்கிறார்கள் என்றால், இந்த சர்க்கார் எதற்கு ஆதரவு கொடுக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இதில் ஆஸ்திக நாஸ்திக வாதத்திற்கு ஒன்றும் இடமில்லை. மத்தியப் பேரரசு இதிலே தலையிட்டு ரூ. 18 லட்சம் தந்து அதற்கான வேலைகள் தொடங்க இருக்கின்றன. அந்த வகையிலே கோவில்களில் அந்தக் காட்சியை வைக்கக்கூடாது என்று அவர்கள் வற்புறுத்துகிறார்களே தவிர, ஆஸ்திக, நாஸ்திக வாதத்திற்கு இதில் எந்தவிதமான இடமும் இல்லை. வாய்ப்பும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பூம்புகாருக்கு சுற்றுலா பேருந்துகள்

*82 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விடுமுறை நாட்களில், சென்னையிலிருந்து பூம்புகாருக்குச் சுற்றுலாப் பேருந்துகள் விடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, பூம்புகார் பட்டணத்தில் பண்டை தமிழர்களுடைய கலாசாரத்தை பிரதிபலிப்பதற்கான நிலையில் தமிழக அரசு குறிப்பாக அங்கு நல்ல கலைக் கூடங்களுக்கு சிறந்த வாய்ப்புகளை உருவாக்கிவைக்குமா ? இனிமேலாகிலும் அந்தப் பகுதிக்கு அதைச் செய்து கொடுக்க அரசு ஆவன செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, பூம்புகார் பட்டணத்தில் சிலப்பதிகாரத்தின் வரலாற்றைக் கூறுகின்ற சம்பவங்களை வடித்து வைக்கின்ற ஒரு ஏற்பாட்டை தமிழக முதல் அமைச்சர் அவர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள். அது முடிந்த பிறகு வேண்டுமானால், திரு. கிட்டப்பா அவர்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. துரை முருகன் : கேரள மாநிலத்திலுள்ள கண்ணகி கோட்டத்தில் சேரன் செங்குட்டுவன் படைத்த கண்ணகி சிலை இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அந்த சிலையை இந்தக் கலைக் கூடத்தில் கொண்டு வந்து வைப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, அதைப் பற்றி குறிப்பு ஒன்றும் என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : கலைக் கூடத்தில் பழைய கலை நிகழ்ச்சிகளை தொடர்ச்சியாக நடத்துவதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : கலைக் கூடம் அமைக்கப்பட்ட பிறகு அதைப்பற்றி ஆராய்ச்சி மேற்கொள்ளப்படும்.

டாக்ஸி டிரைவர் பேரில் வழக்குகள்

* 83 **வினா—திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள வாடகை டாக்ஸி டிரைவர்கள் பொதுமக்களிடம் சரியாக நடந்து கொள்ளாததால் புகார் பேரில் 1970-71-ல் எத்தனை டிரைவர்கள் பேரில் கேஸ் போடப்பட்டது?

(இ) அவர்களில் எத்தனை வாடகை டாக்ஸி டிரைவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

	1970	1971.
(அ) சென்னை நகரில் உள்ள டாக்ஸி டிரைவர்கள் பொதுமக்களிடம் முறையாக நடந்து கொள்ளாதது, வாடகைக்கு ஓட்ட மறுப்பு, இன்னும் அதிகப்படியான கட்டணங்களை கேட்டல் போன்ற புகார்களுக்காக தொடரப்பட்ட வழக்குகள் மொத்தம்.	429	392
(இ) அவற்றுள் அபராதம் விதிக்கப்பட்ட தேர்வுகளின் எண்ணிக்கை.	411	372

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, டாக்ஸி டிரைவர்களில் எல்லோரும் என்று சொல்வதற்கில்லை, சில பேர்கள் பிரயாணிகளிடம் தகாத முறையில் நடந்துகொள்கிறார்கள். கணக்கைப் பார்த்தால் கூட, அதற்காக போடப்பட்ட வழக்கு அதிகமாகிக்கொண்டு வருகிறது. அவர்களை கட்டுப்படுத்தி, மேலும் அவர்கள் பிரயாணிகளிடம் ஒழுங்கான முறையில் நடந்து